


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.06.2023) தலைமைச் செயலகத்தில், மொனாக்கோ ஆற்றல் படகு சவாலில் பங்கேற்கத் தேர்வு செய்யப்பட்டுள்ள இந்தியாவின் ஒரே அணியும், இந்தியாவின் முதல் ஹைட்ரஜனில் இயங்கும் படகை உள்நாட்டு உந்துவிசை அமைப்புடன் உருவாக்கியுள்ள கோயம்புத்தூர், குமரகுரு கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த டீம் சீ சக்தி (Team Sea Sakthi) என்ற மாணவர் குழுவினை ஊக்குவிக்கும் வகையில், இப்போட்டியில் கலந்து கொள்வதற்கான செலவுத் தொகையான 65 இலட்சம் ரூபாயில் அரசின் சார்பில் உதவித் தொகையாக 15 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்வில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளர் அருண் ராய் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் இயக்குநர் சிவராஜா ராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.6.2023) தலைமைச் செயலகத்தில், ரமேஷ் வங்கிபுரம் எழுதிய "Warpath Walking the Battlefields of Cholas" என்ற புத்தகத்தை வெளியிட்டார். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, செந்தில்நாதன், திருமதி தீபா கிறிஸ்டி, திருமதி பார்வதி பீட்டர் ஆகியோர் உள்ளனர்.

### சிறந்த சமூக சேவகர்

# பாலம் பா.கலியாணசுந்தரத்திற்கு குடியிருப்பு ஒதுக்கீடு ஆணை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூன் 29 -

சிறந்த சமூக சேவகர் "பாலம்"பா.கலியாணசுந்தரம் அவர்களுக்கு

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் திருமங்கலம் என்.வி.என். நகர் திட்டப் பகுதியில் குடியிருப்பு ஒதுக்கீடு ஆணையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.06.2023) தலைமைச் செயலகத்தில், சிறந்த சமூக சேவகரான "பாலம்" பா.கலியாண சுந்தரம் அவர்களின் சமூக சேவையை பாராட்டி, அவர்களைக் கௌரவிக்கும் வகையில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சென்னை, திருமங்கலம் என்.வி.என். நகர் திட்டப் பகுதியில் குடியிருப்பு ஒன்றினை ஒதுக்கீடு செய்து, அதற்கான ஆணையினை வழங்கினார்.

"பாலம்" பா.கலியாண சுந்தரம் அவர்கள் கல்லூரியில் நூலகராக பணியாற்றிய காலத்தில் பெற்ற ஊதியம், ஓய்வூதியம், குடும்ப சொத்து மற்றும் விருதுகள் மூலம் கிடைத்த அனைத்தையும் தொண்டு பணிக்கே வழங்கியதோடு, "பாலம்" என்ற அமைப்பினை தொடங்கி நீண்ட காலமாக மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காகவும், குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காகவும் பணியாற்றி, இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது மற்றும் அமெரிக்காவின் "ஆயிரம் ஆண்டுகளில் சிறந்த மனிதர்" (Man of Millennium) விருது பெற்றுள்ளார். சமூக சேவகர் பாலம் பா. கலியாணசுந்தரம் அவர்களின் சேவையை பாராட்டி, அவரை கௌரவிக்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சென்னை, திருமங்கலம் என்.வி.என். நகர் திட்டப்பகுதியில் குடியிருப்பு ஒன்றினை அவருக்கு ஒதுக்கீடு செய்து, பயனாளி பங்குத் தொகையினையும் அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. குடியிருப்பு ஒதுக்கீட்டிற்கான ஆணையினை நேற்றைய தினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "பாலம்" பா.கலியாண சுந்தரம் அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உத்தரப்பிரதேசத்தில்

# 'பீம் ஆர்மி' தலைவர் சந்திரசேகர் ஆசாத் மீது தாக்குதல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஜூன்.29-

உத்தரபிரதேசத்தில் பீம் ஆர்மி தலைவர் சந்திரசேகர் ஆசாத் மீது தாக்குதல் நடைபெற்றிருப்பதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தமது ட்விட்டரில் பதிவிட்டிருப்பதாவது:

பீம் ஆர்மி தலைவர் சந்திரசேகர் ஆசாத் அவர்கள் மீது உத்தர பிரதேச மாநிலம் சஹரன்பூரில் நடத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதலுக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். உத்தர பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு வருவதை இந்த வன்முறைச் செயல் அம்பலப்படுத்தி இருக்கிறது. காயமடைந்துள்ள சந்திரசேகர் ஆசாத் அவர்கள் விரைந்து நலம்பெற விழைவதோடு, கோழைத்தனமான இந்தத் தாக்குதலை நிகழ்த்திய குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

### கால்பந்து தொடரில் அபார வெற்றி:

# தமிழ்நாடு மகளிர் அணிக்குப் பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் 'ட்விட்டர்' பதிவு!

சென்னை, ஜூன் 29-

தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் தொடரில் வெற்றி பெற்று கோப்பை வென்றுள்ள தமிழ்நாடு மகளிர் கால்பந்து அணிக்கு பாராட்டு தெரிவித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:

**27ஆவது தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் தொடரில் அபாரமான வெற்றியைப் பெற்றுக் கோப்பையைக் கைப்பற்றியுள்ள தமிழ்நாடு மகளிர் கால்பந்து அணியினருக்குப் பாராட்டுகள். ஒரு போட்டியில் கூட தோற்காமல் இறுதிப்போட்டிக்கு முன்னேறி அடைந்திருக்கும் இவ்வெற்றி மிகவும் சிறப்புக்குரியது. உங்களது அர்ப்பணிப்பும், திறமையும், அணியாக ஒருங்கிணைந்து விளையாடிய பாங்கும் எங்களைப் பெருமை கொள்ளச் செய்துள்ளன. தொடர்ந்து உயரப் பறந்து மென்மேலும் நம் மாநிலத்துக்குப் பெருமை சேர்ப்பீராக!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பாராட்டியுள்ளார்.

### வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில்

# ரூ.68.83 கோடி செலவில் கட்டப்பட்ட கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன் 29 -

வேளாண்மை உழவர் நலத் துறை சார்பில் ரூ.68.83 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர்

மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.06.2023) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை உழவர் நலத் துறை சார்பில் 68 கோடியே 82 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள், துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள், முதன்மைப் பதப்படுத்தும் மையங்கள், சேமிப்புக் கிடங்குகள், சேமிப்பு வசதியுடன் கூடிய துணை

ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கான கல்விசார் கட்டடங்கள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்களை திறந்து வைத்தார்.

வேளாண்மைத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்திடும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக, விவசாயப் பெருமக்களை அழைத்து, அவர்களது கருத்துகளைக் கேட்டறிந்து வேளாண்மைத் துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து, உழவர்களின் நலனை பேணும் வகையில் வேளாண்மைத் துறை என்ற பெயரினை வேளாண்மை உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றமும் செய்து, வேளாண் பெருமக்களின் வருவாயினை பன்மடங்காக உயர்த்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

வட்டார அளவிலான சேமிப்பு கிடங்குகளுடன் கூடிய ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களானது, வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம் மற்றும் வேளாண் விற்பனை, வேளாண் பொறியியல் மற்றும் விதைச் சான்று ஆகிய அனைத்து துறை அலுவலகங்களையும் உள்ளடக்கிய பொதுவான மையமாக செயல்படுகிறது. இந்த மையங்கள் வாயிலாக தொழில்நுட்ப ஆலோசனைகள், இடுபொருள்கள் விநியோகம், ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களின் செயலாக்கம் ஆகிய அனைத்து செயல்பாடுகளும் ஒரே குடையின் கீழ் விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகின்றன. இதுவரை, 193 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

அதன் தொடர்ச்சியாக, திருப்பூர் மாவட்டம் தாராபுரம், தர்மபுரி மாவட்டம் அரூர் மற்றும் சிவகங்கை மாவட்டம் சிவகங்கை ஆகிய இடங்களில் 6 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள்;

மதுரை மாவட்டம், விநாயகபுரத்தில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நீர் மேலாண்மை பயிற்சிக்கூடம் மற்றும் அலுவலகக் கட்டடம்;

கடலூர் மாவட்டம், அண்ணாகிராமம் வட்டாரம், புதுப்பேட்டை மற்றும் திருமுட்டம் வட்டாரம், காவனூர் ஆகிய இடங்களில் 76 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள்;

வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறை சார்பில், விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ், விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள் மற்றும் பழங்களை தரம் பிரித்து, சேமித்து, பதப்படுத்தி வைத்து, நல்ல விலைக்கு விற்பனை செய்திட ஏதுவாக ஈரோடு மாவட்டம் ஆலுக்குளி, திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர், ஆரணி, செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரம் ஆகிய இடங்களில் 25 கோடியே 62 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதன்மைப் பதப்படுத்தும் மையங்கள்;

விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் விளைப்பொருட்களை சேமித்து வைத்திடவும், அவ்விளைப்பொருட்களுக்கு பொருளீட்டு கடன் பெறவும் ஏதுவாக ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் சேமிப்பு கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தமிழ்நாடு நீர்பாசன மேலாண்மை நவீனமயமாக்கும் திட்ட நிதியிலிருந்து கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு;

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய நிதியிலிருந்து கள்ளக்குறிச்சி மாவட்டம் அரியூர், விழுப்புரம் மாவட்டம் சிறுவந்தாடு, தஞ்சாவூர் மாவட்டம் தென்னூர், திருவாரூர் மாவட்டம் பெருந்தரகுடி ஆகிய இடங்களில் 3 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சேமிப்பு வசதியுடன் கூடிய துணை ஒழுங்கு முறை விற்பனைக்கூடங்கள்;

நபார்டு – கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து

5 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் திருவாரூர் மாவட்டம் கோட்டூர் வட்டம், மேலநத்தம் கிராமத்தில் 1000 மெட்ரிக் டன் சேமிப்புக் கிடங்கு, நீடாமங்கலம் வட்டம், காளாஞ்சிமேடு கிராமத்தில் 2000 மெட்ரிக் டன் சேமிப்புக் கிடங்கு, வலங்கைமான் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் 500 மெட்ரிக் டன் சேமிப்புக் கிடங்கு;

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில்

3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் திசு வளர்ப்பு ஆய்வுக்கூடம், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் உள்ள வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 4 கோடியே 21 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் உடற்பயிற்சி கல்விக்கான கட்டமைப்பு வசதிகள் 6 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் மாணவ, மாணவியர்களுக்கான கல்வி வசதி மையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், குமுளூரில் உள்ள வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 4 கோடியே

21 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் உடற்பயிற்சி கல்விக்கான கட்டமைப்பு வசதிகள், நீலகிரி மாவட்டம், ஊட்டியில் உள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் 4 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி மையம் மற்றும் விருந்தினர் மாளிகை;

என மொத்தம் 68 கோடியே 82 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறைச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மை உழவர் நலத் துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர். நந்தகோபால், வேளாண்மை ஆணையர் டாக்டர் எல். சுப்பிரமணியன், வேளாண்மை வணிகம் மற்றும் வேளாண் விற்பனைத் துறை இயக்குநர் முனைவர் ச.நடராஜன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் இரா. பிருந்தாதேவி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை பள்ளிகளில் பாலின சங்கத் திட்டத்தை செயல்படுத்த

# தலைமையாசிரியர்கள் - ஆசிரியர்களுக்கு பயிற்சி!

## சென்னை மாநகராட்சி ஏற்பாடு!

சென்னை, ஜூன் 29-

உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் "சென்னை மாநகர கூட்டமைப்பு திட்டம்" மற்றும் இந்திய அரசின் "நிர்பயா" திட்டங்களின் கீழ் இந்தியாவிலேயே முதன்முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியில் தமிழ்நாடு அரசின் மூலம் "பாலின நிகர் மேம்பாடு மற்றும் கொள்கை ஆய்வகம்" (Gender and Policy Lab) உருவாக்கப்பட்டு மேயர் அவர்களால் 01.04.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பாலினநிகர் மேம்பாடு மற்றும் கொள்கை ஆய்வகமானது பல துறைகளுடன் ஒருங்கிணைந்து கூட்டு அணுகு முறையின் மூலம் நிர்பயா திட்டத்தினை கண்காணிக்கவும், இதற்கு தேவையான கொள்கைகள் மற்றும் அதற்கான விழிப்புணர்வை உருவாக்கவும், பொது இடங்கள் மற்றும் பொது போக்குவரத்தை பெண்களுக்கு பாதுகாப்பானதாகவும் ஏற்றதாகவும் மாற்றும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பாலின சமத்துவத்தை வளர்ப்பதை கொண்ட பாலின கிளப் (Gender Club) என்ற பாடத்திட்டம் பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்துடன் (Gender and Policy Lab) இணைந்து செயல்படுத்தப்பட உள்ளது.

இந்தப் பாலின கிளப் திட்டமானது பள்ளி மாணவர்களை பாலின பேதமின்றி ஒருவரையொருவர் மரியாதையுடன் நடத்தவும், ஏற்றுக் கொள்ளவும், ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கொண்டது. மேலும், மாணவர்களின் பாலின பேதமில்லா மனப்பான்மை, அவர்களின் எதிர்கால இலட்சியம் மற்றும் நடத்தை ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும். பாலின சமத்துவ உணர்வை குழந்தைகளிடம் வளர்ப்பதற்கும், ஆரோக்கியமான வகுப்பறை சூழலை மேம்படுத்துவதற்கும் பாலின கிளப் திட்டமானது பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பாலின சங்கத்தின் (Gender Club) பாடத்திட்டமானது, இணைந்து செயல்படுதல் மற்றும் ஈடுபடுத்துதல் முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், செயல்பாடுகள், விவாதங்கள் மற்றும் நிஜ வாழ்க்கையின் எடுத்துக்காட்டுகளைக் கொண்டது. பாலின கிளப் மூலம் தற்போதைய பாலின பண்புகள், பாலினம் சார்ந்த எதிர்பார்ப்புகளை அலசுதல், இன்றைய கலாச்சாரம் மற்றும் ஆரோக்கியமான எல்லைகள் என்றால் என்ன? போன்ற தலைப்புகளின் கீழ் மாணவர்கள் விவாதிக்க ஊக்குவிக்கப்படுவார்கள். இந்த கிளப்பானது, தரமான கல்வியின் இன்றியமையாத அம்சமாக மாணவர்களின் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கும், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் ஒரு தளத்தை ஏற்படுத்திக் கொடுக்கும்.

பள்ளி மேலாண்மை கூட்டங்களின் போது பாலின சமத்துவம் சார்ந்த தலைப்புகளில் பெற்றோர்களை ஈடுபடுத்தவும், மாணவர்களின் படைப்புகளை பள்ளி அளவிலான கண்காட்சி நடத்தி வெளிப்படுத்தவும் கூடுதலாக இந்த ஆண்டு பாடத் திட்டத்தில் பாலின கிளப் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பாலின நிகர் மேம்பாடு மற்றும் கொள்கை ஆய்வகமானது, சென்னை பள்ளிகளில் பாலின கிளப் திட்டத்தை செயல்படுத்தும் வகையில் 23.06.2023, 27.06.2023 மற்றும் 28.06.2023 ஆகிய நாட்களில் தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இது குறித்த பயிற்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியானது, ஆசிரியர்களுக்கு பாடங்களை வழங்குவதற்கும், விவாதங்களை எவ்வாறு கையாள்வது என்பதற்கும் உதவும். மேலும், பள்ளிகளில் பாலின கிளப் திட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்ல இந்தப் பயிற்சி உதவும்.



சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (28.6.2023) திறந்தவெளி ஒதுக்கீடு நிலங்கள் கணக்கீடு செய்வதற்கான இறுதிக்கட்ட தேதியை (Cutoff date) நிர்ணயிப்பது தொடர்பாகவும், மாதவரம் மற்றும் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாகவும், 2023–2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, முதன்மைச் செயல் அலுவலர் திருமதி.கவிதா ராமு, தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.